செய்திப் பணிப்பாளர்/செய்தி ஆசிரியர் 23.01.2023

**செய்தி வெளியீடு**

**தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(அடிப்படை 2013=100): டிசம்பர் 2022**


**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**

**நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு**

**தொலைபேசி: 011-2147414 தொலைநகல்: 011-2877945 மின்னஞ்சல் prices@statistics.gov.lk**


2022 டிசம்பர் மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே.நு.வி.சு.) பற்றிய அறிக்கையை வெளியிடுகையில் தொகைமதிப்பு, புள்ளிவிபரப் பதில் பணிப்பாளர் நாயகம், தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்தின் மீது வருட மாற்றத்தினால் (கடந்த வருடத்தின் அதே மாத தே.நு.வி.சு. மீது நடப்பு மாத தே.நு.வி.சு. இல் சதவீத மாற்றம்) அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கமானது 59.2% ஆக கணக்கிடப்பட்டுள்ளது என தெரிவித்தார். 2022 நவம்பர் மாதத்தின் பொருட்டு பதிவாகிய முதன்மைப் பணவீக்கம் 65.0% ஆக இருந்தது. 2022 நவம்பர் மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்க வீதத்திற்கான பங்களிப்புக்கள் முறையே 29.5% மற்றும் 29.6% ஆக காணப்படுகின்றன. அதேவேளை, 14.0% முதன்மைப் பணவீக்கத்தின் பெறுபேறாக 2021 டிசம்பர் மாதத்தில் பணவீக்கத்திற்கான உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்தான பங்களிப்புக்கள் முறையே 10.0% மற்றும் 4.0% ஆக காணப்பட்டன. 2021 டிசம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில், 2022 டிசம்பர் மாதத்தின் பொருட்டு பதிவாகிய பணவீக்கத்துக்கான பிரதான காரணம், உணவு மற்றும் உணவல்லாப் பிரிவு இரண்டிலும் நிலவிய உயர்வான விலை மட்டங்களாகும். இருப்பினும், மாதாந்த அடிப்படையில் உணவுப் பிரிவின் வருடத்தின் மீது வருட பணவீக்கமானது 2022 நவம்பர் மாதத்தில் பதிவாகிய 69.8% இல் இருந்து 2022 டிசம்பர் மாதத்தில் 59.3% வரை குறைவடைந்தது என்பதுடன் உணவல்லாப் பிரிவின் வருடத்தின் மீது வருட பணவீக்கமும் 2022 நவம்பர் மாதத்தில் பதிவாகிய 60.4% இல் இருந்து 2022 டிசம்பர் மாதத்தில் 59.0% வரை குறைவடைந்தது.

மாதம் மீது மாத மாற்றங்களை ஒப்பிடுகையில், 2022 நவம்பர் மாதத்துடன் ஒப்பிடும்போது, 2022 டிசம்பர் மாதத்திற்கான அனைத்துப் பொருட்களுக்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) மாற்றமின்றி 256.3 ஆக இருந்தது. உணவுப்பொருட்களுக்கான செலவுப் பெறுமதி 0.20%ஆல் குறைவடைந்து உணவல்லாப்பொருட்களின் செலவுப் பெறுமதி 0.21% ஆல் அதிகரித்தமை , இந்த மாதம் மீது மாத மாற்றத்திற்கு பங்களித்தது.

உணவுப்பொருட்களின் விலை குறைவுகள் பிரதானமாக பெரிய வெங்காயம், சீனி, மரக்கறி, அரிசி, கருவாடு, கோதுமை மா, மைசூர் பருப்பு, பாண், தேசிக்காய் மற்றும் உருளைக்கிழங்கு என்பன பொருட்டு பதிவாகின. எனினும், சுட்டெண் பெறுமதிகளில் அதிகரிப்புகள் தேங்காய் எண்ணெய், பால் மா, புதிய பழங்கள், தேங்காய், தேயிலை தூள்/இலை, முட்டை, சின்ன வெங்காயம் மற்றும் கோழி இறைச்சி என்பன பொருட்டு பதிவாகின.

முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2022 டிசம்பர் மாதத்தில் உணவல்லாப்பொருட்களின் சுட்டெண் பெறுமதிகளின் அதிகரிப்புகளுக்கு பிரதான காரணம், ‘ஆடையும் காலணியும்’, ‘தளபாடம், குடித்தன உபகரணம் மற்றும் வழமையான குடித்தன பராமரிப்பு’(சக்தி சேமிப்பு மின்குமிழ்கள்), ‘போக்குவரத்து’(வாகன அனுமதிப்பத்திர கட்டணங்கள்), ‘பொழுதுபோக்கும் கலாசாரமும்’ (புத்தகங்கள்), ‘உணவகங்களும் ஹோட்டல்களும்’ அத்துடன் ‘நானாவிதப் பொருட்களும் சேவைகளும்’ (சிங்காரிப்புச் சவர்க்காரம்) ஆகிய பிரிவுகளில் ஏற்பட்ட விலை அதிகரிப்புக்களாகும். எனினும், ‘அற்ககோல் பானங்கள், புகையிலை மற்றும் மதிமயக்க மருந்துகள்’(வெற்றிலை,பாக்கு), ‘வீடமைப்பு, நீர், மின்வலு, எரிவாயு, ஏனைய எரிபொருள்கள்’(பராமரிப்புக்கான பொருட்கள்) ஆகிய பிரிவுகளில் விலை குறைவுகள் பதிவாகின. மேலும், ‘சுகாதாரம்’பிரிவில் மிகவும் குறைந்த விலை அதிகரிப்பு பதிவாகியுள்ளது. அதே நேரம் ‘தொடர்பாடல்’ மற்றும் ‘கல்வி’ பிரிவுகளின் விலைக் குறியீடுகள் இந்த மாதத்தில் மாறாதிருந்தன.

2022 டிசம்பர் மாதத்திற்கான தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்தின் மீது வருட மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறு பொருளாதாரத்தில் தளம்பலுறும் உணவு, வலு மற்றும் போக்குவரத்து போன்றன தவிர்ந்த மூலாதார பணவீக்கத்தை பிரதிபலிக்கும் மையப் பணவீக்கமானது, 2022 நவம்பர் மாதத்தில் பதிவாகிய 60.1% இல் இருந்து 57.5% வரை குறைந்துள்ளது.




## தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2013 = 100)

| வருடம் | மாதம் | சுட்டெண் | | | | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | | வருடத்தின் மீது வருட பணவீக்க % | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தே.நு.வி.சு (முதன்மை) | | | தே.நு.வி.சு (மையம்) | தே.நு.வி.சு (முதன்மை) | தே.நு.வி.சு (மையம்) | தே.நு.வி.சு (முதன்மை) | | | தே.நு.வி.சு (மையம்) |
| | | அனைத்து பொருட்கள் | உணவு | உணவு அல்லாத | அனைத்து பொருட்கள் | | | அனைத்து பொருட்கள் | உணவு | உணவு அல்லாத | அனைத்து பொருட்கள் |
| **2021** | டிசம்பர் | 161.0 | 182.1 | 144.5 | 155.7 | 3.7 | 1.8 | 14.0 | 21.5 | 7.6 | 10.8 |
| **2022** | ஜனவரி | 166.0 | 188.3 | 148.4 | 159.2 | 3.1 | 2.2 | 16.8 | 24.4 | 10.2 | 12.9 |
| | பெப்ரவரி | 167.8 | 190.6 | 149.8 | 161.2 | 1.1 | 1.3 | 17.5 | 24.7 | 11.0 | 14.1 |
| | மார்ச் | 172.7 | 195.2 | 154.9 | 166.3 | 2.9 | 3.2 | 21.5 | 29.5 | 14.5 | 17.3 |
| | ஏப்ரல் | 190.3 | 218.8 | 167.9 | 182.3 | 10.2 | 9.6 | 33.8 | 45.1 | 23.9 | 27.9 |
| | மே | 208.7 | 242.2 | 182.4 | 197.9 | 9.7 | 8.6 | 45.3 | 58.0 | 34.2 | 37.7 |
| | யூன் | 231.5 | 276.6 | 196.0 | 215.9 | 10.9 | 9.1 | 58.9 | 75.8 | 43.6 | 49.3 |
| | யூலை | 244.4 | 289.3 | 209.1 | 229.0 | 5.6 | 6.1 | 66.7 | 82.5 | 52.4 | 57.3 |
| | ஆகஸ்ட் | 250.4 | 294.3 | 215.8 | 235.1 | 2.5 | 2.7 | 70.2 | 84.6 | 57.1 | 60.5 |
| | செப்ரெம்பர் | 256.2 | 296.5 | 224.5 | 241.5 | 2.3 | 2.7 | 73.7 | 85.8 | 62.8 | 64.1 |
| | ஒக்ரோபர் | 256.9 | 294.1 | 227.7 | 244.6 | 0.3 | 1.3 | 70.6 | 80.9 | 61.3 | 62.4 |
| | நவம்பர் | 256.3 | 291.2 | 228.7 | 244.9 | -0.2 | 0.1 | 65.0 | 69.8 | 60.4 | 60.1 |
| | **டிசம்பர்** | 256.3 | 290.0 | 229.7 | 245.2 | 0.0 | 0.1 | 59.2 | 59.3 | 59.0 | 57.5 |

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்